**02.06.2026**

**அ.வ.எண்.294/2015**

**வா.சா.2 ஏழுமலை குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் பாப்பநல்லூர் கிராமம் ஆகும். சுமார் 60 வருடம் அங்குதான் வசித்து வருகிறேன். 2ம் வாதி லட்சுமிகாந்தன் எனக்கு எந்த உறவினரும் கிடையாது, அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். 2ம் வாதிக்கு கோழியாளம் கிராமத்தில் வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பாப்பநல்லூர் கிராமம் மற்றும் கோழியாளம் கிராமத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். 2ம் வாதி லட்சுமிகாந்தன் சென்னையில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான், ஆனால் அடிக்கடி கிராமத்திற்கு வந்து செல்வார். நத்தம் நில உடைமை மேம்பாட்டு திட்டம் எந்த வருடம் கொண்டுவரப்பட்டது என்றால் 1994ம் வருடம் இருக்கும்.

2. வாதியின் சகோதரி பெயர் எனக்கு தெரியுமா என்றால் அலமேலு. அலமேலு எனது மனைவி ஆவார். 2ம் வாதி லட்சுமிகாந்தன் பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளதா என்றால் இருக்கிறது. தாவா பி அட்டவணை சொத்தில் வாதிகள் தனி தனியாக வீடு கட்டியுள்ளார்கள் எந்த திசையில் கட்டியுள்ளார்கள்

என்றால் ரோட்டிற்கு வடக்கு பக்கம் கட்டியுள்ளார்கள். மேற்சொன்ன பி அட்டவணை சொத்தில் நான் எந்த வீடும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

3. 1ம் பிரதிவாதி தேசு ரெட்டியாரிடமிருந்து 1972ம் வருடம் 10 1/2 செண்ட் நிலம் கிரையம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரிந்து கொண்டேன். தேசு ரெட்டியார் மகன் 2ம் வாதி லட்சுமிகாந்தன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற நாளிலிருந்து தாவாசொத்தில் வழி இல்லை என்றால் சரியல்ல, ஆரம்பத்திலிருந்தே அது வழியாகதான் இருந்தது. மேற்கு பக்கம் துர்க்கை கோவில் வழியாக தான் ஊர் மக்கள் வழியாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல.

4. சர்வெ எண்.170/12 மற்றும் 170/13 உட்பிரிவு எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 1994ம் வருடம் ஏற்பட்டது. மேற்சொன்ன சர்வே எண்களின் உட்பிரிவுகள் சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஏற்கனவே கொடுத்துள்ளார்கள். சாலை வழியாகதான் குடிநீர் குழாய் மற்றும் மின் இணைப்புகள் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு எந்த மின்

விளக்குகள் மற்றும் குடிநீர் குழாய் சாலை வழியாக இல்லை என்றால் சரியல்ல.

**5**. சர்வே எண்.**170/12** ல் வழியாக எந்தவொரு சாலையும் கிடையாது, நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.**170/12**ன் பழைய சர்வெ எண் தெரியுமா என்றால் சர்வே எண்.**93** என்று இருக்கலாம். காலம்காலமாக மேற்சொன்ன சர்வே எண்கள் வழியாக சாலையுள்ளது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.